

இந்து சமய அறநிலையத்துறை மானிய கோரிக்கை 2021–22 ல் அறிவித்த சட்டமன்ற அறிவிப்பின்படி சென்னை, குயப்பேட்டை, கந்தசாமி திருக்கோயில் வளாகத்தில் புதியதாக கட்டப்பட்ட வணிக வளாகம் ஏலம் விடப்பட்டு, ஏலம் எடுத்த 10 நபர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவரவர் கடைகளுக்கான சாவிகளை ஒப்படைத்தார். இச்சிறப்பு மிகுந்த நிகழ்வின் போது கந்தசாமி கோயில் செயல் அலுவலர் நித்யகலா மற்றும் கோயில் நிர்வாகிகள் உடனிருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய மற்றும் கரூர் மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 30.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | ஈரோடு தெற்கு | தங்கம் மஹால், மேட்டுக்கடை, பெருந்துறை சாலை, ஈரோடு. |
| | மாலை 3.00 மணி | ஈரோடு மத்திய | விருட்சம் ஹால், பைபாஸ் சாலை, வாவிக்கடை, பெருந்துறை. |
| 31.05.2025 சனிக்கிழமை | காலை 9.30 மணி | கரூர் | ஆர்த்தி அழகம்மை மஹால், திண்ணப்பா தியேட்டர் அருகில், கரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 27-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி





மே 29

கழக துணை பொதுச்செயலாளரும், முன்னாள் மத்திய அமைச்சரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான

**ஆ.இராசா** B.Sc.,ML,MP அவர்களின் மனைவி

**அ. பரமேஸ்வரி** அவர்களின்

நீங்கா நினைவுகளுடன்

**V.செந்தில்பாலாஜி** முன்னாள் அமைச்சர்

**தொ.அ.ரவி** கோவை வடக்கு மாவட்ட செயலாளர்
**C.R.இராமச்சந்திரன்** Ex.MLA மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச்செயலாளர்
**பா.அருண்குமார்** மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச்செயலாளர்

**T.R.சண்முகசுந்தரம்** தலைமை செயற்குழு உறுப்பினர்
**அ.அசரப் அலி** B.A.,B.L., தலைமை செயற்குழு உறுப்பினர்
**அ.அறிவரசு** B.E.,B.L., நகர கழக செயலாளர் – கூடலூர்
**MAR.K.ஹக்கீம்** B.E., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

**SMT.கல்யாணசுந்தரம்** காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர்
**S.சுரேந்திரன்** காரமடை மேற்கு ஒன்றிய செயலாளர்
**ப.முனுசாமி** B.A.,B.L., நகர கழக செயலாளர் – தெற்கு
**மு.முகமது யூனூஸ்** நகர கழக செயலாளர் – வடக்கு

**R.வெங்கடேஷ்** நகர கழக செயலாளர் – காரமடை
**M.R.உதயகுமார்** நகர கழக செயலாளர் – சிறுமுகை
**R.S.நவீன்குமார்** MC பொதுக்குழு உறுப்பினர்
**K.குருபிரசாத்** MC பொதுக்குழு உறுப்பினர்

வழக்கறிஞர். **S.சபிக்** B.Com.,BL மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்
**S.ரமேஷ்குமார்** மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்
**A.அப்பாஸ்** 5 வது வார்டு கிளை செயலாளர்
**S.யுவராஜ்**
**V.ராஜேஷ்** B.Com.,
**K.தட்சிணாமூர்த்தி**

**வழக்கறிஞர். K.சந்தானகுமார்** B.A.,LLB.,
கோவை வடக்கு மாவட்டம்






தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் பிற அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஈரோட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் வாரியத் தலைவர் பொன்குமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

# 4142 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.5.75 கோடி உதவித் தொகை!

## ஈரோட்டில் அமைச்சர் சு.முத்துசாமி – வாரியத் தலைவர் பொன்குமார் வழங்கினர்!

ஈரோடு, மே.29-

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் பிற அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஈரோட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வீட்டுவசதி, முதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் வாரியத் தலைவர் பொன்குமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து கொள்ளும் தொழிலாளர்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்திலிருந்து இறந்து போனால் 8 லட்சம் ரூபாய் அந்த குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு 4 லட்சம் ரூபாய் இலவசமாக வழங்கப்படுகிறது. 60 வயதில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. திருமணத்திற்கு உதவி, பேறுகால உதவி, பிள்ளைகள் படிப்பதற்கான கல்வி உதவி என பல்வேறு உதவிகள் வாரியத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் ஒரு திட்டத்தினுடைய பணப்பயனும் உயர்த்தப்படவில்லை. எந்த புதிய திட்டமும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அனைத்துத் திட்டப் பணப்பயன்களும் இரட்டிப்பாக உயர்த்தியதோடு 8 புதிய திட்டங்களையும் அறிவித்துள்ளது. அனைத்து பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முழு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு மருத்துவ அட்டை வழங்கக்கூடிய அரிய திட்டம் முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல 60 வயது கடந்த, பிள்ளைகளால் உற்றார் உறவினர்களால் கைவிடப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முதியோர் இல்லம் தொடங்குவதற்கும் முதலமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்படிப்பட்ட திட்டத்தின் பலன்களைத் தொழிலாளர்களுக்கு உடனடியாக கொண்டு சேர்க்க வேண்டும் என்ற முதலமைச்சர் எண்ணத்திற்கு ஏற்ப நலவாரிய பணிகள் முடுக்கி விடப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. அதனுடைய பலனாக நான்காண்டு காலத்தில் சுமார் 20 லட்சம் தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதிதாக பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த அடிப்படையில் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக் கூடிய நிகழ்ச்சி 27.5.2025 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ராஜகோபால்சுன்கரா இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வீட்டுவசதி, முதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் தொழிலாளருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் 4142 தொழிலாளர்களுக்கு 5,75,70,200 கோடி ரூபாய் அளவு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் தொழிலாளர் இணை ஆணையர் பா. மாதவன் அவர்கள் வரவேற்று பேசினார். கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய செயலாளர் க. ஜெயபாலன் அவர்கள் திட்டம் குறித்து விளக்க உரையாற்றினர். அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். தொழிலாளர் உதவி ஆணையர் முனைவர். த.முருகேசன் (ச.பா.தி) நன்றி கூறினார்.

## தஞ்சை வடக்கு மாவட்டம்

# திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியம் திருவிடைமருதூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியம், திருவிடைமருதூர் பேரூர்க் கழகச்செயலாளர்சுந்தரஜெயபால்திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. இரா.கோபாலகிருஷ்ணன்,** (தெற்கு எடத் தெரு, திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம்.) அவர்கள் திருவிடைமருதூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 600 018
நாள்– 28.5.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே. மன்னப்பன்

## மே 29 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நெருக்கடி காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோதும் கழகத்தின்மீது உறுதியாக பற்றுடன் திகழ்ந்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.